# 18

## குடும்பம் ஆவியானவர் வாசம் செய்யும் ஸ்தலம் ...

# குடும்பத்திலுள்ள தயவு

## [கலாத்தியர் 5:22, 23]

*எப்படி கிறிஸ்தவ குடும்பம் சந்தோஷமாக வெற்றிகரமான குடும்பமாய் விளங்கும்? ஆவியானவர் அந்த குடும்பத்தில் கனி கொடுப்பதை உறுதி செய்யும்போதுதான். எந்தவிதமான கனி? கலாத்தியர் 5:22, 23 "ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை" என்று கூறுகிறது.*

*ஆவியானவர் வாசம் செய்யும் குடும்பத்தில் அன்பு, சந்தோஷம், சமாதானம் மற்றும் பொறுமை (அல்லது நீடிய பொறுமை) நிரம்பியிருக்கும் - மற்றும் இந்த பண்புகள் நிறைவான குடும்பம் உண்டாவதற்கு உதவி செய்யும். இதற்கு மேலாக, ஆவியானவர் வாசம் செய்யும் குடும்பம் தயவு மற்றும் சாந்தம் ஆகியபண்புகளால் அடையாளப்படுத்தப்பட்டிருப்பதால் வலிமையாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கும்.*

### தயவின் சிறப்புத்தன்மை

*கிரேக்க வார்த்தை தயவு என்று மொழியாக்கப்பட்டுள்ளது.* Chrestotes *என்ற இந்த வார்த்தையின் வடிவம் பத்து முறை கிரேக்க புதிய ஏற்பாட்டில் உள்ளது, ஆனால் இங்கு மாத்திரம்* KJV *யில் "சாந்தம்" என்று மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. மற்ற ஒன்பது முறையும்* KJV *மொழிபெயர்ப்பில் "நல்லது" (ஒரு முறை), "நற்குணம்" (நான்கு முறை), மற்றும் "தயவு" என்று (நான்கு முறை) மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. மற்ற மொழியாக்கங்களில் பெரும்பாலானவை "தயவு" என்று மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது* (Weymouth; Phillips; RSV; NRSV; NASB; NEB; NIV). W. E. *வைன் சொன்னார்,*

> [*அந்த வார்த்தை chrestotes*] *குறிப்பது "நற்குணம்" (அ) நேர்மையான நீதியான என்ற வகையில், ரோமர் 3:12 ("நன்மை" என்று மொழியாக்கப்பட்டது); (ஆ) நற்குணம் நிறைந்த இருதயம் என்ற அர்த்தத்தில் அல்லது செயலில், தேவனைப்பற்றி உரைக்கப்பட்டது, ரோமர் 2:4; 11:22 (மூன்று முறை); எபேசியர் 2:7 ("தயவு"); தீத்து 3:4 ("தயவு"); விசுவாசிகளைக் குறித்து சொல்லப்பட்டதால் "தயவு" என்று அளிக்கப்பட்டது, 2 கொரிந்தியர் 6:6; கொலொசெயர் 3:12; கலாத்தியர் 5:22 ...*[1]

*கலாத்தியரைப் பற்றிய தங்கள் படிப்பில்* C. F. *ஹாக் மற்றும்* W. E. *வைன்* *chrestotes* *ஐப் பற்றி இவ்வாறு விளக்கம் அளித்தனர்:*

> ... நற்குணம் அது வெறும் நல்ல பண்பு மட்டுமல்ல, மாறாக நற்குணம் என்பது செயல்வடிவமாகும், நற்குணம் தன்னை செயல்களில் வெளிப்படுத்தும்; இருப்பினும் நற்குணம் பாவத்திற்கு எதிராக தன்னை வெளிப்படுத்தும், ஆனால் அது தேவனுடைய தயவிற்கு எதிர்மறையானது ரோமர் 11:22, ஆனால் கிருபையிலும் மற்றும் இரக்கத்திலும் மற்றும் கருணையிலும் பெறுகிறது.[2]

ஒரு மனிதனுடைய செயலை மற்றொருவரோடு பொறுத்தி பார்க்கும் போது "தயவு" என்ற வார்த்தை சிறந்த மொழிபெயர்ப்பாயிருக்கிறது.

## தயவின் தேவை

ஆவியின் கனியின் இந்த பண்பு சந்தோஷமான குடும்பத்திற்கு மிகவும் முக்கியம்; உண்மையில், *குடும்பத்தில் தரமான உறவுகளுக்கு தயவு தான் திறவு கோல்.* கிறிஸ்தவம் என்றால் என்ன என்ற பிரசங்கத்தில் டேவிட் ரோப்பர் "குடும்பத்தில் கிறிஸ்தவம் என்பது தயவு"[3] என்றார். அவர் சரியாக சொன்னார், குடும்பத்தில் நமக்கு தயவு தேவை.

ஏன்? ஏனென்றால் குடும்பம் நீடித்திருப்பதற்கு குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் ஒருவரையொருவர் அனுசரித்து பொறுமையாக இருக்கலாம், இருப்பினும் அந்த குடும்பத்தில் சந்தோஷமின்மை காணப்படலாம். குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் கிறிஸ்தவர்களாய் இருக்கலாம், அதன் பலனாக அந்த குடும்பத்தில் ஒரளவு சமாதானம் இருக்கலாம் - ஆனால் அதுவே சந்தோஷமான குடும்பம் ஆகாது. ஒரு குடும்பம் நிரந்தரமாக இருக்கலாம், இருப்பினும் அதில் நிரந்தரமான பயங்கரமும் முன்னுணர்ச்சியும் இருக்கும். அந்த இடத்தில் சிரிப்பு என்பது இல்லாதிருக்கும், சந்தோஷ உணர்வே இல்லாமல் இருக்கும், குடும்பம் ஒன்றாக இருக்க வேண்டும் என்ற பிடிவாதமான நோக்கம் மட்டுமே இருக்கும். ஒரு தம்பதியின் நோக்கம் இவ்வாறாக வெளிப்படுத்தப்படலாம்: "நான் இந்த திருமணத்தில் நிலைத்திருப்பேன் (அல்லது குடும்பத்தில்) ஏனென்றால் நான் இருக்க வேண்டும் என்பதற்காக, ஆனால் எனக்கு இஷ்டமில்லை."

ஒரு குடும்பத்தில் இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கலாம். அதில் ஒவ்வொரு துணையும் படுக்கையை விட்டு காலை எழுந்திருக்கும் போது, தங்கள் பல்லைக் கடித்துக் கொண்டு சொல்லுவது, "இந்த திருமணத்தில் மற்றொரு நாள் வேண்டாம்! நான் வெறுக்கிறேன், ஆனால் நான் இதில் சிக்கிக் கொண்டிருக்கிறேன்! நான் வாழ்ந்துதான் ஆக வேண்டும், ஆனால் நான் அதில் சந்தோஷம் பெறாமல்!" பின்பு ஒவ்வொருவரும் கடுகடுப்பான முகமூடியைப் போட்டுக் கொண்டு நாள் முழுவதும் சந்தோஷமில்லாமலேயே உழுகின்றனர். ஒருசிலருக்கு, திருமணத்தின் மற்றோரு நாளை காண்பது என்பது அதிகாலை எழுந்து வேலைக்கு போவது போன்று அல்லது மருத்துவரிடம் செல்லுவது போன்றும் இருக்கிறது - ஏதோ ஒரு காரியம் செய்துதான் ஆக வேண்டும் ஆனால் அச்சத்துடன், அதில் எந்த விதமான சந்தோஷத்தின் நம்பிக்கையும் இல்லை.

எவ்வாறு ஒரு குடும்பம் தங்கள் வீட்டை ஒரு மந்தமான இடமாக வைத்துக் கொள்ளாமல் இருக்க உறுதியாக இருப்பார்கள்? *தரமான மனித உறவுகள்* இப்படிப்பட்ட சூழ்நிலைகளைத் தவிர்த்து மற்றும் குடும்பத்தை

மகிழ்ச்சி உள்ள இடமாக மாற்றும். இப்படிப்பட்ட உறவுகளை உருவாக்குவது எது? எந்த ஒரு விஷயம் கணவன் அல்லது மனைவி, பெற்றோர் மற்றும் பிள்ளைகள் மத்தியில் நல்ல உறவுகளை ஏற்படுத்துகிறது? திருமண உறவு மிகவும் நெருக்கமாயிருந்தாலும், மற்ற மனித உறவுகளை விட வித்தியாசம் ஒன்றுமில்லை. திருமண பந்தத்திற்கு அப்பாற்பட்டு நண்பர்கள் மற்றும் நெருக்கமான தனிப்பட்ட உறவுகளின் தரம் உயர்த்துவது குடும்பத்திலும் நல்ல உறவுகளை வளர்ப்பதற்கு உதவுகிறது.

எந்த பண்புகள் நல்ல மனித உறவுகளை எல்லா இடத்திலும் பெருகச் செய்கிறது? அதில் ஒன்று தயவு. *தரமான உறவுகளுக்கு திறவுகோல் தயவு ஆகும்.* தயவு என்பது பொதுவாக சிறிய நற்குணம் என்று கூறுவர், ஆனால் கிறிஸ்தவர்கள் விசேஷமாக குடும்பத்தில் இதனை பெரியதாக கருதவேண்டும். எபேசியர் 4:32 “ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்” என்கிறது.

## தயவை செயல்படுத்துதல்

குறிப்பாக, நம்முடைய வீட்டில் மூன்று வகையில் தயவாய் இருக்க வேண்டும்.

**நியாத்தீர்ப்பில் தயவு**

குடும்பத்தில், *நியாயத்தீர்ப்பில் நாம் தயவாய் இருக்க வேண்டும்.* நாம் மற்றவர்களைப்பற்றி *தயவாய் நினைப்பதற்கு* கற்றுக்கொள்ள வேண்டும். நாம் மற்றவர்களை நியாயம் தீர்க்க மறுப்பதினால் நியாயந்தீர்ப்பதில் தயவாய் இருக்கலாம். இயேசு “நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்” என்று சொன்னார் (மத்தேயு 7:1). அவர் நிச்சயமாக மற்றவர்களுடைய நடவடிக்கைகளை ஒருபோதும் நாம் மதிப்பிடக் கூடாது என்று அவர் சொல்லவில்லை. அவர் என்ன சொல்லிக் கொண்டிருந்தார்? (அ) மற்றவர்களுடைய குற்றங்களுக்காக அவர்களை திட்டும்போது, நமது சொந்தத் தவறுகளை காணாது விடக்கூடாது (மத்தேயு 7:3-5). (ஆ) நாம் மற்றவர்களை நியாயம் தீர்க்கும்போது ஒரு சட்டமும் நமக்கு ஒரு சட்டமும் வைக்கக் கூடாது. (இ) நாம் மற்றவர்களுடைய நோக்கத்தை நியாயந்தீர்க்கக்கூடாது. (ஈ) மற்றவர்களை நாம் மதிப்பிடும்போது மிகுந்த கண்டிப்பாகவோ மிகவும் கடினமாகவோ அல்லது மிகவும் கடுமையாகவே இருக்கக் கூடாது.

நம்முடைய குடும்பத்தில் நியாயந்தீர்க்கும்போது நாம் எப்படி தயவாய் இருக்கக்கூடும்? மூன்று அறிவுரைகள் விசேஷமாக முக்கியமானதாகக் காணப்படுகிறது.

1. *நாம் மிகுந்த கண்டிப்பாகவோ, மிகவும் கடினமாகவோ அல்லது கடுமையாகவோ இருக்கக் கூடாது.* ஒருவேளை பவுல் “உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல் இருங்கள்” என்று எழுதும்போது இப்படிப்பட்டதான புத்திகூறுதலை அவர் இருதயத்தில் கொண்டிருந்தார் (எபேசியர் 6:4; கொலோசெயர் 3:19 பார்க்கவும்). இரண்டு உறவுகளிலும் கணவன்/மனைவி மற்றும் பெற்றோர்/பிள்ளைகள் - குறிப்பாக தலைவர்களாய் இருப்பவர்கள்

- மற்றவர்களிடம் மிகவும் கடினமாக இருக்கக் கூடாது என்பது மிகவும் முக்கியமானதாகும்.

2. *இதற்கு எதிரிடையாக நம்முடைய குடும்பத்திலிருப்பவர்களுக்காக நாம் சிறந்தவைகளை சிந்திக்க வேண்டும்.* நாம் மற்றவர்களுடைய பெலத்தைக் குறித்து கவனமாயிருக்க வேண்டும் அவர்களுடைய குற்றத்தை அல்லது பெலவீனத்தையல்ல. நாம் அவர்களை நல்ல மனிதர்களென சிந்திக்க வேண்டும். நாம் அவர்களிடம் சிறந்தவற்றை எதிர்பார்த்தோமானால், அவர்கள் நம்முடைய எதிர்பார்ப்புக்கு ஏற்றதாக ஜீவிப்பார்கள். சுய நிறைவுகளாலும் தீர்க்கதரிசனம் என்று ஒன்று உள்ளது. ஒரு மனிதனுக்கு தன் மகனை எப்போதும் குறைகூறும் தவறான பழக்கம் இருந்தது, "இவன் தான் ஜோய், இந்த பட்டணத்திலேயே மோசமான பிள்ளை." என் தந்தை வேண்டுமென்றே இப்படி கூறுவார், "இவன் தான் ஜோய், இந்த பட்டணத்திலேயே சிறந்த பிள்ளை." நாம் நம்முடைய பிள்ளைகளை "கெட்டவர்கள்" என்று கூறக்கூடாது. நம்முடைய பிள்ளைகளை கண்டிக்க "நீ செய்த இந்த செயலினிமித்தம் ஏமாற்றமடைந்தேன்" என்று கூறுவது சிறந்ததாகும்.

3. *மற்றவர்களுடைய நோக்கத்தை நாம் நியாயந்தீர்க்க முடியாது.* நாம் நம்முடைய பிள்ளைகளை கையாளும் போது, நாம் இப்படி சிந்திக்கலாம்: நமக்கு சரியாக தெரியும், ஏன் அதை செய்தார்கள், என்ன செய்தார்கள் என்று (மற்றும் சில சமயங்களில் நாம் சரியாக இருக்கலாம்), ஆனால் நமக்கு தீர்மானமாக தெரியாது. நாம் அவர்கள் நடத்தையைத் தான் கையாள வேண்டும், அவர்கள் நோக்கத்தையல்ல. நம்முடைய வாழ்க்கை துணையோடு பேசிக்கொண்டிருக்கிற போது நமக்குள் கருத்து வேறுபாடு இருக்கிற ஒரு விஷயத்தைப்பற்றி அல்லது சில காரியங்களில் நாம் வேறுபட்டு இருக்கிறபோது, துரிதமான முடிவு எடுப்பதற்கு நாம் விலகி இருக்க வேண்டும். "அவர் நான் சங்கடப்படுவதற்கு இதை செய்தார்" என்றோ அல்லது "அவள் நான் பித்து பிடிப்பதற்காக இப்படி செய்தாள்" என்றோம் நாம் ஒருபோதும் நினைக்கக் கூடாது. நாம் நோக்கத்தை குறிவைக்காமல் அவர்கள் நடத்தையில் கவனம் வைக்க வேண்டும்.

**பேச்சில் தயவு**

குடும்பத்தில், *பேசுவதில் நாம் தயவாய்* இருக்க வேண்டும். நாம் மற்றவர்களிடம் *பேசும்போது* அல்லது மற்றவர்களைப் பற்றி பேசும் போது தயவாய் இருக்க வேண்டும், நாம் என்ன பேசுகிறோம் மற்றும் எப்படி பேசுகிறோம் என்பதில் நாம் ஜாக்கிரதை உள்ளவர்களாய் இருக்க வேண்டும். நம் குடும்பத்திலுள்ளவர்களிடம் மற்ற எந்த இடத்தை விட குடும்பத்தில் சற்று சுதந்திரத்தை நாம் அனுபவிக்கலாம், அதனால் நாம் குடும்பத்தில் என்ன வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் பேசலாம் என்பதல்ல. சில விஷயங்களை சில மாதிரியாக வெளிப்படுத்துவது சூழ்நிலைகளை இன்னும் மோசமாக மாற்றும். தவறான காரியத்தை தவறான முறையில் வெளிப்படுத்துவது கணவன் மற்றும் மனைவி உறவுகளை சரிசெய்ய முடியாத அளவிற்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

மேலும், குடும்பத்திலுள்ள நபர்கள் தங்கள் வார்த்தைகளில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஏனென்றால் சில வார்த்தைகள் பேச வேண்டிய அவசியமே இருக்காது. உதாரணமாக, இரண்டு பேரும் தங்கள் திருமணத்திற்கு முன்பு

உள்ள அவர்கள் உறவுகளை பரஸ்பரம் வெளிப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.[4] "நான் இந்த பாவத்தை இரகசியமாக வைக்காதிருந்தால் எனக்கு சமாதான உணர்வைத்தருமா?" என்பது கேள்வியல்ல. கேள்வி என்ன வென்றால், "நான் இரகசியத்தை வெளிப்படுத்துவது உதவியாயிருக்குமா?" என்பதே. இந்த அறிக்கையிடுதல் உறவுகளை கட்டவோ, துணையை உற்சாகப்படுத்தவோ அல்லது திருமணத்திற்கு உதவியாயிருக்கவோ போவதில்லை.

இருப்பினும் பிரதானமாக, நாம் என்ன வேண்டுமானாலும் வெளிப்படையாக பேசக்கூடாது, ஏனென்றால் மற்றும் நாம் என்ன பேசுகிறோம் எப்படி பேசுகிறோம் என்பதில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று வோதகமம் நம்மை எச்சரிக்கிறது.

*யாக்கோபு 3:6 - "நாவும் நெருப்புதான்." (அவர் உட்கருத்தாக கூறுவது என்னவென்றால் கிறிஸ்தவர்கள் தங்கள் நாவை அடக்குவதற்கு சிறந்தமுறையில் முயற்சிக்க வேண்டும்.)*

*மத்தேயு 12:36, 37 - "மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய்."*

*கொலோசெயர் 4:6 - "அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்ல வேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக."*

*எபேசியர் 4:29 - "கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்."*

*நீதிமொழிகள் 15:1 - "மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்; கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்."*

*நம்முடைய குடும்பத்தில் நாம் எப்படி தயவாய் பேச வேண்டும்?*

*நாம் விரயமாக வார்த்தைகளை பேசலாம்,* குடும்பத்தில் "தயை செய்" "நன்றி" மற்றும் "என்னை மன்னியுங்கள்" போன்ற வார்த்தைகளை உபயோகப்படுத்துவதற்கு போதிக்க வேண்டும்.

*நாம் பாராட்டுகிற வார்த்தைகளை பேசலாம்.* நம்மை நாமே இப்படிப்பட்ட கேள்விகளை கேட்டுக் கொள்ளலாம்: "எப்பொழுது கடைசிமுறையாக நான் என் மனைவியின் தோற்றத்தைப் பார்த்தோ அல்லது அவளுடைய சமையலைப்பற்றியோ பாராட்டியிருக்கிறேன்?"; "எப்பொழுது கடைசியாக என் பிள்ளைகளை பாராட்டி இருக்கிறேன்?"; "எப்பொழுது கடைசியாக என் கணவரிடம் நீங்கள் தினமும் எவ்வளவு கஷ்டப்பட்டு வேலை செய்கிறீர்கள் என்று பாராட்டியிருக்கிறேன்?" எந்த ஒரு விஷயமும் வாழ்க்கையை அதிகமாக தாங்கச் செய்கிறது என்றால் உண்மையான பாராட்டுகிற வார்த்தைகளால்தான்.

*நாம் உற்சாகப்படுத்தும் வார்த்தைகளை பேசலாம்.* மக்கள் தொடர்ந்து உற்சாகப்படுத்தும் வார்த்தைகளைக் கேட்கக் கூடிய இடம் குடும்பமாகத்தான் இருக்க வேண்டும். ஆகிலும் குடும்பத்திலுள்ளவர்கள் அடிக்கடி ஒருவரையொருவர் தோய்வு அடைகிற வார்த்தைகளையே பேசுவர். மற்ற பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளிடம் எப்படி விளையாடுகிறார்கள் என்று நாம் கவனித்திருக்கலாம். அவர்கள் உற்சாகப்படுத்தும் வார்த்தைகளையா அல்லது தோய்வு அடையும் வார்த்தைகளையா, எவற்றை பேசுகிறார்கள்? சில துணைகள் மற்றும் பெற்றோர்கள் பரியாசம் மற்றும் கடுஞ்சொற்களை பிள்ளைகளிடம் உபயோகப்படுத்துகிறார்கள். இதைவிட தயவற்றது ஒன்றும் இருக்காது.

*நாம் ஆர்வம் மற்றும் அக்கரை உள்ள வார்த்தைகளை பேசலாம்.* பள்ளி மாணவர்களிடத்தில் உள்ள வேறுபாடு - தேர்ச்சி பெருபவர்கள் மற்றும் தோல்வியடைபவர்கள் இடையில்; உதாரணமாக - பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் பள்ளி வேலைகளில் காண்பிக்கும் ஆர்வம். தன் குடும்பத்தில், மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப் பற்றி ஒருவருக்கொருவர் உற்சாகமான வார்த்தைகளை பேசுவது மிகவும் முக்கியம்.

*நாம் சாந்தமாகவும், உண்மையாகவும், மற்றும் அன்பாகவும் பேசலாம்.* பேசுகிற விஷயத்தைவிட பேசும்முறையானது அதிக முக்கியம் அல்ல, ஆனால் அதுவும் முக்கியம். ஆதலால் நாம், நம்முடைய பேச்சுத் தோரணை அன்பை வெளிப்படுத்தும் வண்ணமாக காணப்படுவதற்கு முழு கவனம் மற்றும் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். பலவிதமான தொடர்பு கொள்ளும் முறையை எடுத்துக் கொண்டாலும், தொடர்ந்து கூக்குரல் இடும் குடும்பத்தில் தயவான சூழ்நிலை உருவாகாது.

**செய்கைகளில் தயவு**

குடும்பத்தில், நமது *செய்கைகளிலும் தயவு* இருக்க வேண்டும். நாம் மற்றவர்களிடம் *தயவாய் நடந்துகொள்ள வேண்டும்,* "குடும்பம் என்பது நாம் நன்றாக நடத்தப்படும் மற்றும் நாம் மோசமாக செயல்படும் இடமாக இருக்கிறது" என்று ஒருவர் சொன்னார். சில புருஷர் மற்றும் ஸ்திரீகள் நாள் முழுவதும் சந்தை வெளிகளில் வேலை செய்து தயவாய் நடந்து சந்திக்கும் எல்லாரிலும் மரியாதையாக நடந்து கொள்வார்கள், ஆனால் இரவில் தங்கள் அன்பானவர்களிடம் செல்லும் போது அவர்கள் கேவலமாகவும் நச்சரிப்பவர்களாகவும் மற்றும் கடுமையாகவும் குடும்பத்திலுள்ளவர்களிடம் நடந்து கொள்ளுவார்கள். "என் சகோதரரே இந்த விஷயங்கள் இப்படியிருக்கலாகாது" (யாக்கோபு 3:10). நாம் மற்றவர்களிடம் எவ்வளவு தயவோடு நடந்து கொள்ளுகிறோமே, அப்படியே நாம் குடும்பத்திலுள்ளவர்களிடமும் தயவோடு நடந்து கொள்ள வேண்டும்.

*செய்கையில் தயவு என்பது யாது?* சகோதரர் ஜே. சி. பெய்லி[5] தயவை குறித்ததான ஒரு உதாரணத்திற்கு எபெத்மெலேக் எரேமியாவை துரவிலிருந்து தூக்கிவிட்ட சம்பவத்தை உபயோகப்படுத்தினார்.

> அவர்கள் எரேமியாவைத் துரவிலே போட்டதை ராஜாவின் அரமனையில் இருந்த எத்தியோப்பியனாகிய எபெத்மெலேக் என்னும் ஒரு பிரதானி கேள்விப்பட்டான்; ராஜாவோ பென்யமீன் வாசலிலே உட்கார்ந்திருந்தான்.

*அப்பொழுது எபெத்மெலேக் ராஜாவின் அரமனையிலிருந்து புறப்பட்டுப் போய், ராஜாவை நோக்கி: ராஜாவாகிய என் ஆண்டவனே, இந்த புருஷர் எரேமியா தீர்க்கதரிசியைத் துரவிலே போட்டுச் செய்தது எல்லாம் தகாத செய்கையாயிருக்கிறது; அவன் இருக்கிற இடத்திலே பட்டினியினால் சாவானே, இனி நகரத்திலே அப்பமில்லை என்றான். அப்பொழுது ராஜா எபெத்மெலேக் என்னும் எத்தியோப்பியனை நோக்கி: நீ இவ்விடத்திலிருந்து முப்பது மனுஷரை உன்னுடனே கூட்டிக் கொண்டுபோய், எரேமியா தீர்க்கதரிசி சாகாததற்கு முன்னே அவனைத் துரவிலிருந்து தூக்கிவிடு என்று கட்டளையிட்டான். அப்பொழுது எபெத்மெலேக் அந்த மனுஷரைத் தன்னுடனே கூட்டிக் கொண்டு, ராஜாவின் அரமனைப் பொக்கிஷசாலையின் கீழிருந்த அறைக்குள் புகுந்து, கிழிந்து போன பழம்புடவைகளையும் கந்தைத்துணிகளையும் எடுத்துக்கொண்டு போய், அவைகளைக் கயிறுகளினால் எரேமியாவண்டைக்குத் துரவிலே இறக்கிவிட்டு, எபெத்மெலேக் என்னும் எத்தியோப்பியன் எரேமியாவுடனே: கிழிந்துபோன இந்த பழம்புடவைகளையும் கந்தைகளையும் உம்முடைய அக்குள்களில் கயிறுகளுக்குள் அடங்கவைத்துப் போட்டுக் கொள்ளும் என்றான்; எரேமியா அப்படியே செய்தான். அப்பொழுது எரேமியாவைக் கயிறுகளால் தூக்கி, அவனைத் துரவிலிருந்து எடுத்துவிட்டார்கள்; எரேமியா காவற்சாலையின் முற்றத்தில் இருந்தான் (எரேமியா 38:7-13).*

எபேத்மெலேக் எரேமியாவுக்கு அக்குள்களில் தோலுக்கும் கயிறுகளுக்கும் இடையில் அடக்கி வைக்கும்படியாக கொடுத்த கந்தைத்துளிகளில் தயவைக் காணமுடியும், என்று சகோதரர் பெய்லி சொன்னார். தயவு என்பது ஆகவே அதிகமாக செய்கிற, செல்கிற அந்த "இரண்டாவது மைல்" (பார்க்க மத்தேயு 5:41) - மற்றவர்களுடைய வாழ்க்கை சுலபமாகவும் மற்றும் அதிக சந்தோஷமாகவும் இருப்பதற்கு சற்றே கொஞ்சம் அதிகமாக செய்வதுதான்.

நம்முடைய பிள்ளைகளிடம், தயவு என்பது ...

- அவர்களுடன் நேரம் செலவிடுகிறது,
- அவர்களுடன் விளையாடுவது,
- நாம் ஏதாவது இடத்திற்கு செல்லும்போது அவர்களையும் அழைத்து செல்வது,
- அவர்கள் வேதனைப்படும்போது ஒரு முத்தம் கொடுப்பது, காரியங்கள் சரியாக நடக்காத போது அவர்கள் அழுவதற்கு தோள் கொடுப்பது,
- அவர்களை உற்சாகப்படுத்துவதும் மற்றும் தவறுகளில் மன்னிப்பு அளிப்பதும்.

இவற்றில் ஒன்றும் பெற்றோர்கள் கட்டாயமாக செய்ய வேண்டியதில்லை, நம்முடைய பிள்ளைகளுக்கு இவைகள் இல்லாமல் உணவு மற்றும் உடை மற்றும் ஆவிக்குரிய வழிநடத்துதல்களை நாம் கொடுக்க முடியும். இருந்த போதிலும், இப்படிப்பட்ட காரியங்கள் கொடுப்பது தயவு - மற்றும் நமக்கு மற்றும் நமது பிள்ளைகள் ஆகிய இருவருக்கும் சன்மானமாகும்.

நம்முடைய துணையிடம் தயவை இப்படியாக வெளிப்படுத்தலாம்:

- *சாதனைகளை அங்கீகரிப்பது மற்றும் அழிவுகளை மற்றும் தோல்விகளை மறப்பது,*
- *எப்பொழுதும் அவனை அல்லது அவளை கட்டுகிறவர்களாய் இருக்க வேண்டும், ஒருபோதும் கிழித்துப்போடக் கூடாது,*
- *"சிறிய காரியங்களை" அவளுக்காக அல்லது அவனுக்காக செய்வது,*
- *அவருக்கு பிடித்த வண்ணமாக உணவு சமைத்தல்,*
- *அவளுக்கு பிடித்த இடத்திற்கு செல்லுதல்,*
- *"நான் உன்னை நேசிக்கிறேன்" என்று சொல்லுவது,*
- *அன்பை சிறந்த முறையில் வெளிப்படுத்துவது.*

*ஒருவேளை இவையெல்லாவற்றிற்கும் மேலாக, தயவு என்பது சிந்தனையுள்ள தன்மை. அநேக திருமண ஆலோசகர்கள் அறிவுறுத்துவது என்னவென்றால், கணவர்கள் தங்கள் மனைவிகளிடம் திருமணமான அந்த சமயத்தில் இருந்ததான அதே நேசத்தோடு இருக்க வேண்டும் - அவளை "நேசிப்பதற்கு" சிறு சிறு பரிசுகள் கொடுப்பது போன்ற செயல்கள். சந்தேகமேயில்லாமல் மனைவியை இவைகள் சந்தோஷமாக்கும். மேலும் ஒருவேளை இவைகள் தன்னை சிறந்ததாக உணர தன் கணவன் தன்னை அதிகமாக நேசிப்பதாக காண்பிப்பது அல்ல; தன் கணவன் தன்னை கவனிப்பதும் மற்றும் தனக்கு பிடித்தவற்றை செய்வதுமே. இப்படிப்பட்ட கொடுத்தலில் சுயநலம் இருப்பதில்லை. (ஒருவேளை இருக்கலாம், உதாரணமாக, கணவன் தான் உபயோகப்படுத்தும் பொருளையே மனைவிக்கு பரிசாக வாங்கி கொடுத்து அதை தானே உபயோகப்படுத்துவது.) அநேகமாக, கணவர் பொதுவாக தன் மனைவிக்காக சிறிதான சிறந்த செயல்களை செய்யும்போது அவளை நினைத்திருக்கிறான் என்பதை காண்பிக்கும்போது, அவளும் தன்னை சமமாக நன்றாகவே உணர்வாள். அவளைப்பற்றி நினைவுள்ளவனாகவும், அக்கறையுள்ளவனாகவும், மற்றும் தன்னுடையது போல அவளுடைய நலனிலும் அக்கறையுள்ளவராக இருக்கிறான் என்பது முக்கியமேயல்லாமல் அவன் பரிசாகப் பொருட்களை வாங்கி வருகிறானா என்பது முக்கியமல்ல.*

*"நான் என் மனைவிக்கு கொடுப்பதற்கு அவளுக்கு இப்பொழுது என்ன தேவையாய் இருக்கிறது?" அல்லது "இன்றைக்கு என் கணவருக்கு எப்படி ஏற்ற துணையாய் இருக்க முடியும்?" என்று கேட்டுக் கொள்வதே தயவாய் இருக்கிறது. (பார்க்க ஆதியாகமம் 2:18, 20; KJV.) சிறிய தயவுகள் கீழ்வருபவற்றை உள்ளடக்கியதாகும்:*

- *அவளுக்கு தேவையானதை வாங்குவதோ அல்லது செய்வதோ.*
- *வீட்டு வேலைகளில் உதவி செய்வது.*
- *அவளிடம் பேசுவதற்கு சமயம் ஒதுக்குவது மற்றும் அவள் பேசுவதை உண்மையாய் கவனிப்பது.*
- *ஒன்றாக சமயம் செலவிடுவது.*

*இவைகள் எல்லாம் தயவின் செயல்களாய் இருக்கக்கூடும். இந்த சிறிய விஷயங்கள் திருமண உறவுகளில் மிக முக்கியமான பங்கு வகிக்கிறது.*

## முடிவுரை

குடும்பங்களில் நாம் மிகவும் அதிகமாக அன்பு செலுத்தும் மக்கள் மத்தியில் மிக பெரிதாக வாக்குவாதங்களும் மற்றும் பெரிய அளவிலான முரண்பாடுகளும் எழும்புகிறது ஏன் என்று எப்போதாவது ஆச்சரியப்பட்டதுண்டா? இந்த உண்மை வியப்பாயிருக்கக் கூடாது. ஏனென்றால் நம் குடும்பத்துடன் தான் - வேறு எந்த உறவுகளுக்கும் மேலான நெருக்கத்துடன் - நாம் அதிக நெருக்கமாக வாழ்கிறோம். மக்கள் ஒன்றாக நெருக்கமாக வாழும்போதுதான் வேறுபாடுகள் கூர்மையான குவியத்தில்தான் வரும். இரண்டு தனித்தனியே சுற்றும் சக்கரத்தில் உராய்வு ஏற்படாது - ஆனால் நாம் அவைகளை ஒன்று சேர்த்தால், உராய்வு ஏற்படும். அதுபோல, மக்கள் சேர்ந்து வாழும் போது, உராய்வு ஏற்படுவதற்கு அதிக வாய்புகள் உள்ளது.

நாம் முரண்பாட்டை குறைப்பது அல்லது தவிர்ப்பது எப்படி? தயவு என்ற ஒரு எண்ணெய் பொருள் இந்த உராய்வை குறைக்கவும் அல்லது தவிர்க்கவும் முழுமையாக உதவும். உராய்வுகளை தவிர்ப்பதற்காக தயவை தாராளமாக பயன்படுத்தும் போது நாம் குடும்பத்தில் மகிழ்ச்சியாகவும் ஒன்றாகவும் வாழ்வதற்கு உதவும்.

---

குறிப்புகள்

[1]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Publishers, 1985), 274. [2]C. F. Hogg and W. E. Vine, *The Epistle to the Galatians* (Grand Rapids, Mich.: Kregel Publications, 1921), 292. [3]David Roper, "What Is Christianity?" *The Preacher's Periodical* 3 (August 1982): 21. [4]தெளிவாகவே, வேறொருவருடன் தொடர்பு வைத்துக் கொள்வது பாவமான காரியம். கிறிஸ்தவர்கள் திருமண பந்தத்திற்கு வெளியே பாலுறவு கொண்டவர்கள் அந்த பாவத்திற்காக மன்னிப்பு பெற்றுக் கொள்ளவேண்டும். இருப்பினும், திருமணத்திற்கு முன்பு செய்த பாவத்திற்கு அவனோ அல்லது அவளோ தன் துணையிடம் அறிக்கையிட அவசியமில்லை. ஒரு நபருக்கு பால்வினை பரவும் நோய் இருப்பின், அவள் அல்லது அவன் தன் வாழ்க்கைத் துணையிடம் தனது குறைவைப் பற்றிய உண்மைநிலையை திருமணத்திற்கு முன்பே பகிர்ந்து கொள்ள வேண்டும். [5]J. C. Bailey, sermon presented in Weyburn, Saskatchewan, Canada, in the early 1960s.